# நடப்பு நிகழ்வுகள்- மே 14 - 2017

- பஞ்சாப் மாநிலத்தில் பாகிஸ்தான் எல்லை அருகே வாகா பகுதியில் **107 அடி உயர கம்பியில் பிரமாண்ட தேசியக் கொடியை மத்திய உள்துறை இணையமைச்சர் கிரண் ரிஜிஜு** 13 – 05 – 17 அன்று **ஏற்றி வைத்தார்.**

- **6 இந்தியர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்தனர்.** சுரேஷ் பாபு, துர்க்கா ராவ் குஞ்சா, பரத் தம்மினெனி, கிருஷ்ணா ராவ் வூயகா, சத்ய ராவ் கரே மற்றும் நாகராஜு சுந்தரனா ஆகிய 6 இந்தியர்கள் நேபாளத்தைச் சேர்ந்த 10 வழிகாட்டிகளுடன் சென்று சாதனை படைத்தனர்.

- சீன எல்லை அருகே **பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட இந்தியாவிலேயே மிக நீளமான பாலத்தை வருகிற 26 – ம் தேதி பிரதமர்மோடி திறந்து வைக்கிறார்.** அசாம் – அருணாச்சலபிரதேச மாநிலங்களை இணைக்கும் வகையில் தோலா – சதியா ஆகிய இடங்களுக்கு இடையே பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே 9.15 கிலோ மீட்டர் நீளத்தில் கட்டப்பட்டுள்ளது. இதன் பணிகள் 2011 – ம் ஆண்டு தொடங்கப்பட்டதாகும் ரூ950 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இந்த ஆற்றுப்பாலம் மும்பையில் பாந்த்ரா – ஒர்லி இடையே கடலில் கட்டப்பட்டுள்ள பாலத்தை விட 3.35 கிலோமீட்டர் அதிக நீளம் கொண்டது.

- வீரமரணம் அடைந்த சி.**பி.ஆர்.பி.எப்.வீரர்களின் குடும்பத்துக்கு 25 வீடுகள் நடிகர் விவேக் ஓபராய் வழங்கினார்.** மும்பை அருகே உள்ள தானேயில் கட்டப்பட்டு உள்ள இந்த வீடுகள் வீரமரணம் அடைந்த சி.பி.ஆர்.பி.எப்.வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

- **முதலாம் ராஜராஜ சோழன் அவையில் இருந்த அமைச்சர் ஜெயந்தனைப்பற்றிய** 10 – ஆம் நூற்றாண்டு **கல்வெட்டு** ஒன்று கலசப்பாக்கம் சட்டப்பேரவை தொகுதி தென்மாதேவமங்கலத்தில் அமைந்துள்ள **பர்வத மலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.** இந்த கல்வெட்டை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இணைப் பேராசிரியர் அ.சதீஷ் என்பவர் கண்டுபிடித்துள்ளார்.

❖ தமிழக அரசின் சுகாதாரத் துறையில் முதல்வரின் விரிவான காப்பீட்டுத்திட்டம் செயல்படுகிறது. இதில் 1,016 வகை நோய்கள் மற்றும் பாதிப்புகளுக்கு நிவாரணம் பெற அரசு அனுமதி வழங்கியுள்ளது. தற்போது 126 வகையான சமீபத்திய மருத்துவ அறுவை சிகிச்சை மற்றும் பாதிப்புக்கான நிவாரணங்களும் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் **ஆதார் விபரங்களை இணைக்க "Cmchis Online" என்ற புதிய மொபைல் ஆப் அறிமுகம்** செய்யப்பட்டுள்ளது.

❖ **நிமோனியா நோய்க்கெதிரான தடுப்பூசி** (anti-pneumonia vaccine) யை **"பொது தடுப்பூசி திட்டத்தில்"** (Universal Immunisation Programme (UIP)) 13–05–2017 அன்று இந்திய அரசு **இணைத்துள்ளது.** உலகளவில் நடைபெறும் நிமோனிய தாக்குலில் 20% இந்தியாவில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

❖ 2016 – 2017 நிதியாண்டில் தென்னிந்திய மாநிலங்களில் **அதிக வருவாய் பற்றாக்குறை** (revenue deficit) **மாநிலமாக தமிழ்நாடு இருப்பதாக ரிசர்வ் வங்கி** வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் **குறிப்பிட்டுள்ளது.**

❖ "வெப்ப படமெடுத்தல்" (thermal imaging) தொழில்நுட்பத்திற்கான இந்தியாவின் முதல் அகச்சிவப்பு சென்ஸார்களை (infrared sensors)" உருவாக்கி ஐ.ஐ.டி மும்பை (IIT – Bombay) சாதனை படைத்துள்ளது. இந்த கருவிகள் இராணுவத்தின் செயல்பாட்டிற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கும் என எதிர்பாக்கப்படுகிறது.

❖ சீன – பாகிஸ்தான் பொருளாதார வழித்தட (எக்கனாமிக் காரிடார்) திட்டம் தொடர்பாக சீனாவில் மே–14 ம் தேதி தொடங்கி மே–16 வரை நடைபெற உள்ள கருத்தரங்கை புறக்கணிக்கப் போவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த வழித்தடம் **பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள சில்கிட் மற்றும் பால்டிஸ்தான் வழியாகவும் அமைக்கப்பட உள்ளது.** இந்த பகுதிகள் இந்தியாவுக்கு சொந்தமான பகுதி என்பதால் அந்த பகுதிகளில் மட்டும் பொருளாதார வழித்தடம் அமைக்க மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது குறிப்பிடத்தக்கது.